17-01-2013 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார மந்தநிலைதொடக்கவுரையாடல் : சபேசன்**

*தற்போது ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்தநிலையானது அந்நாடுகளின் பொருளாதார அமைப்புப் பற்றியும் உலகின் பொருளாதார அமைப்புப் பற்றியும் அதற்கான மாற்றுக்கள் பற்றியும் பரவலான உரையாடல்களைத் தூண்டிவிட்டுள்ளது.*

*சில ஆண்டுகளுக்கு ஒருமுறை மீண்டும் மீண்டும் இவ்வாறான மந்தநிலைக்கு முதலாளித்துவப் பொருளாதாரம் உள்ளாகிறது. இதற்கு முன்னர் பொருளாதார மந்த நிலை ஏற்பட்டபோது மேற்குலக நாடுகளுக்கு வெளியே மூலதனத்தை இட்டு செய்யப்பட்ட தொழில்களை மறுபடியும் மேற்கு நாடுகளுக்கு மீள அழைத்துக்கொள்ளும் செயற்பாடுநடைபெற்றது. ஆனால் இந்தமுறை அதற்கான வாய்ப்பும் இல்லாமற்போயிருக்கிறது.*

*இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் உலகமயமாக்கலின் உதவியுடன் முதலாளித்துவம் தனது எல்லைகளை விரிக்கத் தொடங்கியது. அரசுகளின் நிதிக்கட்டுப்பாடுகள் தடையற்ற வர்த்தகத்திற்கு தடையாக இருந்தன. காலப்போக்கில் திறந்த பொருளாதாரக் கொள்கைகள் பல்வேறு நாடுகளை வந்து சேர்ந்தன.*

*இதன் விளைவால் அரசானது பொருளாதார விடயங்களை கட்டுப்படுத்தவோ ஒழுங்குபடுத்தவோ கூடாது என்ற கோஷம் எழுந்தது. இது பின்னர் கோட்பாட்டுருவாக்கம் பெற்றது. ஆனால் இன்று பொருளாதார நெருக்கடி உச்சம் பெற்றிருக்கின்ற நிலையில் Bringing the States Back in என்று அரசானது பொருளாதார விடயங்களை மேற்பார்வை செய்யவேண்டும் என்றும் ஒழுங்குபடுத்த வேண்டும் என்று வலுவான குரல்கள் எழுவதோடு இது கோட்பாட்டுருவாக்கம் பெற்றும் இருக்கிறது.*

*தேச எல்லைகள் கடந்து எல்லைகள் அற்றதாக மூலதனம் மாறிவிட்ட நிலையில் இன்றைய பொருளாதார நெருக்கடி தவிர்க்கவியலாததாக மாறிவிட்டது. அமெரிக்காவில் 2008 இல் லீமன் பிரதர்ஸ் முதலீட்டு வங்கியின் வீழ்ச்சியோடு தொடங்கிய அமெரிக்கப் பொருளாதார நெருக்கடி மிகக் குறைந்த காலத்தில் உலகப் பொருளாதார நெருக்கடியாக மாற்றமடைந்தது.*

முதலாளித்துவமும் பொருளியல் வல்லுனர்களும் இது தற்காலிக நெருக்கடிதான் என்று தொடர்ந்து சத்தியம் செய்து வந்தாலும் இது முடிவற்ற சுழலின் தொடக்கம் என்பதை உலக மக்கள் உணர நீண்டகாலம் எடுக்கவில்லை. இந்த பொருளாதார நெருக்கடியின் அடுத்த கட்டத்தை நாம் நெருங்கியிருக்கிறோம்.

*முதலாளித்துவமும் பொருளியல் வல்லுனர்களும் இது தற்காலிக நெருக்கடிதான் என்று தொடர்ந்து சத்தியம் செய்து வந்தாலும் இது முடிவற்ற சுழலின் தொடக்கம் என்பதை உலக மக்கள் உணர நீண்டகாலம் எடுக்கவில்லை. இந்த பொருளாதார நெருக்கடியின் அடுத்த கட்டத்தை நாம் நெருங்கியிருக்கிறோம்.*

*ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரங்களே இன்னும் கடுமையான வீழ்ச்சியை சந்தித்துக் கொண்டிருக்கின்றன. மக்களது வாங்கும் சக்திக் குறைவினால் தோன்றிய உற்பத்தித் தேக்க நெருக்கடியைச் சமாளிப்பதற்காக செயற்கையாக வாங்கும் சக்தியை அதிகரிக்கும் விதத்தில் வங்கிகளின் கடன் தருவதற்கான வட்டி விகிதத்தைக் குறைத்துப் பணப்புழக்கத்தை அதிகரிக்கும் நடவடிக்கைகளைப் பல ஐரோப்பிய நாடுகளின் அரசுகள் மேற்கொண்டன.*

*அதன் விளைவாகப் பணவீக்கம் அதிகரித்து அரசுகள் மிகக்கடுமையான பற்றாக்குறை நிதிநிலை அறிக்கைகளை சமர்ப்பிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.*

**மிகுதி அடுத்த பக்கம்**

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

**நீதித்துறையின் சுதந்திரமும் இலங்கையும்**
சு. விஜயகுமார் | 24-01-2013

**அழகியல்**
ராஜரட்ணம் | 31-01-2013

R2P (Right to protect)
தெ. ஞா. மீநிலங்கோ | 07-02-2013



சி. பி. முத்தம்மா

*சி. பி. முத்தம்மா (Chonira Belliappa Muthamma, கொனெரி பெல்லியப்பா முத்தம்மா, ஜனவரி 24, 1924 – அக்டோபர் 14, 2009) இந்தியக் குடியுரிமைப் பணித் தேர்வில் வெற்றியடைந்த முதல் பெண். இந்தியாவின் முதல் பெண் வெளியுறவுத்துறை அதிகாரியாக 1949 இல் பணியில் சேர்ந்தவர். சென்னைக் கல்லூரிகளில் பட்டம் பெற்றவர்.*

ஆண்கள் மட்டுமே ஆட்சி செய்துகொண்டிருந்த வெளியுறவுத்துறையில் பணிபுரிய விரும்பி அரசுபணித் தேர்வாணையம் நடத்திய தேர்வில் மிகச் சிறப்பாகத் தேர்ச்சி பெற்று இந்திய வெளியுறவுத் துறை பணியில் சேர்ந்தார் முத்தம்மா. வெளியுறவுத் துறையில் பணிபுரியும் அளவு கடந்த ஆர்வத்தோடு பணியில் சேர்ந்த முத்தம்மா ஒவ்வொரு கட்டத்திலும் பலவிதமான பால்நிலை ரீதியிலான பாகுபாடுகளுக்கு ஆளாக நேர்ந்தது.

வெளியுறவுத்துறையின் சட்டவிதிகளில் இருந்த பால்நிலைப் பாகுபாடுகளுக்கெதிராக தொடர்ச்சியாகப் போராடிய முத்தம்மா உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து அதில் வெற்றிபெற்றார். அவ்வழக்கிற்கான உயர்நீதிமன்றத் தீர்ப்பு இந்திய அரசுத்துறையின் சட்டவிதிகளில் இருந்த பல பால்நிலைப்பாகுபாடுகள் நீக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்தது.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
121 , ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.

0772260165
0752151580

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார மந்தநிலை

முன்பக்கத் தொடர்ச்சி..

அதாவது முதலாளியச் சந்தை நெருக்கடி, நெருக்கடி நிலையிலும் அதிகபட்ச லாபம் ஈட்ட விரும்பி சூதாட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்ட நிதி நிறுவனங்களின் மீள முடியாத நெருக்கடியாக மாறி அதனைச் சமாளிக்க நடவடிக்கை எடுத்த முதலாளிய அரசுகளின் பொருளாதார ரீதியிலான செல்லுபடித் தன்மையையே கேள்விக்குரியதாக்கும் அதிதீவிர நெருக்கடியாகத் தற்போது மாறியுள்ளது.

இதன் விளைவே நெருக்கடியும் பிணையெடுப்பும். இது ஊக வணிகத்தின் கோரப் பிடியில் இருக்கும் ஐரோப்பிய முதலாளியப் பொருளாதாரத்தை மிகத் தற்காலிகமாகக் காப்பதற்கான ஏற்பாடன்றி மக்கள் நல நோக்கிலான நடவடிக்கை அல்ல.

முதலாளித்துவ உற்பத்தி முறையானது தொழிநுட்பத்தின் உதவியுடன் உற்பத்தியைப் பெருக்கவும் தொழிலாளர்களுக்கான தேவையைக் குறைக்கவும் அதன் மூலம் இலாபத்தைப் பெருக்கவும் முனைகிறது.

இது வேலையில்லாப்பிரச்சினையை ஒருபுறம் உருவாக்கியபடி சந்தையில் நுகர்வோர் குறைந்த நிலையில் உற்பத்திப்பொருட்களின் பெருக்கத்தையும் ஏற்படுத்துகிறது.

இந்த இடத்தில் இவ்வுற்பத்திமுறை நெருக்கடிக்குள்ளாகிறது. தொழிநுட்பத்தை கைவிட்டு விட முடியாத நிலையில் புதிய சந்தைகளைத் திறக்கவும் குறைந்த செலவில் மூல வளங்களைப் பெறவும் வேண்டியதாகிறது. இதற்காக முதலாளிய அரசுகள் மற்றைய நாடுகளின் மீது போர்தொடுக்கவும் வளங்களைச் சுரண்டவும் உழைப்பைச் சுரண்டவும் வேண்டியதாகிறது.

சுழல் போல அடிக்கடி ஏற்படும் இத் தேக்க நிலைகளுக்கும், அதனால் ஏற்படும் கெடுதியான விளைவுகளுக்கும் மாற்றாக, மூலதனத்தை மக்கள்மயப்படுத்திய திட்டமிட்ட பொருளாதார முறையினை மார்க்சியவாதிகள் முன்வைக்கின்றார்கள்.

### ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார மந்தநிலை (இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு)

1. முன்னேற்றமடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் அரைகுறை முதலாளித்துவ நாடுகளிலும் நீதித்துறையின் சுதந்திரம் பற்றிய சிந்தனைப்போக்கு


2. இலங்கையில் நீதித்துறைச் சுதந்திரம் பற்றிய நோக்கு

3. தற்போதைய அரசியல் யாப்பின் கீழ் நீதித்துறைச் சுதந்திரம். (17ம் 18ம் திருத்தம்)

4. இலங்கையில் சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை ஆகியவற்றுக்கும் இடையிலுள்ள மோதல்.

5. அண்மையில் நீதித்துறைக்கும் சட்டவாக்கத்துக்கும் இடையில் இடம்பெற்ற மோதலும் அதன் பின்னணிகளும்

6. இலங்கையில் நீதித்துறையின் எதிர்காலம்.




## பாடிப்பறை - ஜனவரி 2013 (சங்கக் கவிதையாக்கம்)

26 - 01 - 2013 சனிக்கிழமை (பௌர்ணமி விடுமுறை) மாலை 4.30 - 6.30 வரை

இடம் : தேசிய கலை இலக்கியப் பேரவை
121, ஹம்டன் லேன், வெள்ளவத்தை, கொழும்பு-06 (புதிய முகவரி)

**ஈழத்துக் கவிதை பகிர்வு**
"புதியதொரு வீடு என்ற பாநாடகத்தின் இசைப்பாக்கள்: மீனவர் பாடல்"
- க. ஆதித்தன்.

**மொழிபெயர்ப்புக் கவிதை**
"எங்கள் காலத்தின் குழந்தைகள்"
- ம. மிதுனராகுல்

**ஆய்வுரையும் கலந்துரையாடலும்**
"சங்கக் கவிதையாக்கம்"
- பேராசிரியை அம்மன்கிளி முருகதாஸ்

**அழ. பகீரதனின் "இப்படியும்" கவிதைத் தொகுப்பு அறிமுகம்**
அறிமுகவுரை - சோ. தேவராஜா
கருத்துரை - மு. மயூரன்

## சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் யாழ்ப்பாணம்

26-01-2013 சனிக்கிழமை காலை 9:30 மணிக்கு அரங்க செயற்றிறன் இயக்க , ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில்

### "சமூகமும் சமூக விஞ்ஞான நோக்கும்"

கலந்துரையடால்...

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA